# 1 தெசலோனிக்கேயர் 3

## நவீன மொழிபெயர்ப்பாளர்களின் பகுதிப்பகுதியான பிரிவுகள்

| USB[4] | NKJV | NRSV | TEV | NJB |
|---|---|---|---|---|
| மறுபடியும் சபையைச் சந்திப்பதற்கான பவுலின் விருப்பம் | அவர்களின் விசுவாசமீதான அக்கறை | தெசலோனிக்கேயர் மீதான பவுலின் கரிசனை | மறுபடியும் அவர்களைச் சந்திப்பதற்கான பவுலின் விருப்பம் | தெசலோனிகேய பட்டணத்திற்கான தீமோத்தேயுவின் பணி |
| (2:17-3:13) | | (2:17-3:13) | (2:17-3:13) | |
| 3:1-5 | 3:1-5 | 3:1-5 | 3:1-5 | 3:1-5 |
| | தீமோத்தேயுவால் ஊக்கப்படுத்தப்படல் | | | பவுல் தெசலோனிக்கேயரின் நல்ல அறிக்கைகளுக்காக தேவனுக்கு நன்றிசொல்லல் |
| 3:6-10 | 3:6-10 | 3:6-10 | 3:6-10 | 3:6-10 |
| | சபைக்கான ஜெபம் | | | |
| 3:11-13 | 3:11-13 | 3:11-13 | 3:11-13 | 3:11-13 |

**வாசிப்பு சுழற்சி 3 (சிறந்த வேத வாசிப்புக்கான வழிகாட்டலிலிருந்து)**

*பந்திபந்தியான பிரிவுகளின் அடிப்படையில் எழுத்தாளரின் உண்மையான நோக்கத்தை அறிதல்*

இது ஒரு கற்றல் வழிகாட்டல் விளக்கவுரை. அதாவது, வேதாகமத்திற்குரிய உங்களுடைய தனிப்பட்ட பொருள் விளக்கத்துக்கு நீங்களே பொறுப்பாளர்கள். நம்மோடிருக்கும் வெளிச்சத்தோடு நாம் ஒவ்வொருவரும் கண்டிப்பாக நடக்க வேண்டியது அவசியம். நீங்களும், வேதாகமமும் பரிசுத்த ஆவியும் பொருள்விளக்கத்துக்கு இன்றியமையாதவர்கள். நீங்கள் இதனை விளக்கவுரையாளருக்கு விட்டுவிட முடியாது.

முழு அதிகாரத்தையும் ஒரே அமர்வில் வாசிக்கவும். விடய பிரிவுகளை இனங்கண்டுக்கொள்ளுங்கள். மேற்கூறப்பட்ட ஐந்து மொழிப்பெயர்ப்புக்களுடனும் உங்களுடைய விடய பிரிவுகளை ஒப்பிட்டுப்பாருங்கள். பகுதிப்பகுதியான

பிரிவுகளானது வெளிப்பாடாயில்லாவிட்டாலும் மொழிப்பெயர்ப்பின் ஆதாரமாகிய எழுத்தாளருடைய நோக்கத்தினை புரிந்துக்கொண்டு பின்தொடருவதற்கான திறவுகோலாய் இருக்கிறது. ஒவ்வொரு பந்தியும் ஒரே ஒரு விடயத்திளை உள்ளடத்தியே காணப்படுகின்றது.

1. முதலாவது பந்தி
2. இரண்டாவது பந்தி
3. மூன்றாவது பந்தி
4. போன்றவை.

**3ம் அதிகாரத்தின் சுருக்கமான வரைகோடு**

A. பவுல் மிகுந்த கவலையுடன், தீமோத்தேயுவை அவர்களிடம் அனுப்புகிறார், 1 தெச. 3: 1-5
B. தீமோத்தேயு நற்செய்தியுடன் திரும்புகிறார், 1 தெச. 3: 6-10
C. பவுலின்தெசலோனிக்கேய சபைக்கானஜெபம் , 1 தெச. 3: 11-13

**சொல் மற்றும் சொற்றொடர் ஆய்வு**

**NASB (புதுப்பிக்கப்பட்ட) வார்த்தை: 1 தெசலோனிக்கேயர் 3:1-10**

**1 ஆகையால், இனிமேல் அதைத் தாங்க முடியாமல், அத்தேனே பட்டணத்தில்
தனியாக விடப்படுவது சிறந்தது என்று நாங்கள் நினைத்து. 2 உங்கள்
விசுவாசத்தின் நன்மைக்கருதி உங்களை பெலப்படுத்தவும் ஊக்குவிக்கவும்
எங்கள் சகோதரரும் கிறிஸ்துவின் நற்செய்தியில் தேவனின் சக ஊழியருமான
தீமோத்தேயுவை அனுப்பினோம், 3 எனவே எனவே இந்த
உபத்திரவங்களினாலே ஒருவனும் தொந்தரவுக்கு உட்படக்கூடாதபடிக்கு.
இதற்காகவே நாங்கள் குறிக்கப்பட்டுள்ளோம் என்பதை நீங்களே அறிவீர்கள். 4.
நமக்கு உபத்திரவம் வருமென்று நாங்கள் உங்களிடத்திலிருந்தபோது,
உங்களுக்கு முன்னறிவித்தோம்; அப்படியே வந்து நேரிட்டதென்றும்
அறிந்திருக்கிறீர்கள். 5ஆகையால், நான் இனிப் பொறுத்திருக்கக்கூடாமல்,
எங்கள் வேலை வீணாய்ப் போகத்தக்கதாகச் சோதனைக்காரன் உங்களைச்
சோதனைக்குட்படுத்தினதுண்டோ என்ற பயத்தில், உங்கள் விசுவாசத்தை
அறியும்படிக்கு, அவனை அனுப்பினேன். 6. இப்பொழுது தீமோத்தேயு
உங்களிடத்திலிருந்து எங்களிடத்தில் வந்து, உங்கள் விசுவாசத்தையும்
அன்பையும் குறித்தும், நீங்கள் எப்பொழுதும் எங்களைப் பட்சமாய்
நினைத்துக்கொண்டு, நாங்கள் உங்களைக் காண வாஞ்சையாயிருக்கிறது
போல நீங்களும் எங்களைக் காண வாஞ்சையாயிருக்கிறீர்கள் என்பதைக்
குறித்தும், எங்களுக்கு நற்செய்தி சொன்னதினாலே, 7. சகோதர சகோதரிகளே,
எங்களுக்கு நேரிட்ட எல்லா இக்கட்டிலும் உபத்திரவத்திலும் உங்கள்
விசுவாசத்தினாலே உங்களை குறித்து ஆறுதலடைந்தோம். 8. நீங்கள்
கர்த்தருக்குள் உறுதியாக நிலைத்திருந்தால் நாங்கள் பிழைத்திருப்போம். 9.
மேலும், நம்முடைய தேவனுக்கு முன்பாக நாங்கள் உங்களைக்குறித்து
அடைந்திருக்கிற மிகுந்த சந்தோஷத்திற்காக, நாங்கள் தேவனுக்கு எவ்விதமாய்
ஸ்தோத்திரம் செலுத்துவோம்? 10.உங்கள் முகங்களைக் காணும்படியும், உங்கள்**

**விசுவாசத்தின் குறைவுகளை நிறைவாக்கும்பொருட்டும், இரவும் பகலும் நாங்கள் மிகவும் ஆவலுடன் ஜெபிக்கிறோமே.**

**3: 1 "ஆகையால்,** நாங்கள் இனிப் பொறுத்திருக்கக்கூடாமல்" ஏனெனில் பவுல் இந்த சபையைக் பற்றி கவலைப்பட்டார், ஏனெனில் (1) அது உபாத்திரவத்தின் மத்தியில் பிறந்தது ஓ.பா. 1 தெச. 2: 17-20) மற்றும் (2) அவர் இவ்வளவு சீக்கிரம் வெளியேற வேண்டியிருந்தது. அவருடைய மேய்ப்பனின் இதயம் அவரை ஓய்ந்திருக்க விடவில்லை (ஓ.பா. 1 தெச. 3: 5).

▣ **"தனித்துவிடப்படுகிறது"** இந்த நிகழ்கால செய்வினை (1) ஒரு குழந்தை தனது பெற்றோரை விட்டு பிரிவதை, எபே. 5:31 (2: 7, 11, 17 போன்ற மற்றொரு பெற்றோரின் உருவகம்) அல்லது (2) ஒருவரின் துணையின் இறப்பு (ஒ.பா. மாற்கு 12:19). பவுல் இந்த சபையை மிகவும் நேசித்தார்.

▣ **"அத்தேனே பட்டணத்தில் மட்டும்"** பவுலின் வருகை அப்போஸ்தலர் 17: 15-34-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது ஹெலனிஸ்டிக் உலகின் அறிவுசார் மையமாக இருந்தது. பவுலுக்கு கண் பிரச்சினைகள் இருந்ததால் (2 கொரி. 12: 7 ஐ கலா. 4:15 மற்றும் 6:11 உடன் ஒப்பிடுங்கள்), அவர் குறிப்பாக அத்தேனே பட்டணம் போன்ற அறிமுகமில்லாத சூழலில் தனியாக இருப்பது மிகவும் கடினமாக இருந்தது. "தனியாக" என்ற சொல் பன்மை ஆனால் பொருள் நிச்சயமற்றது. அப்போஸ்தலர் 18: 5ல் சீலா மற்றும் தீமோத்தேயு இருவரும் ஊழியப் பணியில் இருந்ததைக் குறிக்கிறது. இந்த வசனத்தை பவுல் "நாம்" என்ற ஒரு தொகுப்பு பன்மையாக பயன்படுத்தியதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு, தன்னை மட்டுமே குறிப்பிடுகிறது.

**3:2**

**NASB "தேவ ஊழியக்காரனும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தில்"**
**NKJV "தேவனின் ஊழியரும், கிறிஸ்துவின் நற்செய்தியில் நம்முடைய சக ஊழியரும்"**
**NRSV "கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பதில் தேவனின் சக வேலையாள்"**
**TEV "கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியைப் பிரசங்கிப்பதில் தேவனுக்காக எங்களுடன் பணியாற்றுபவர்"**
**NJB "கிறிஸ்துவின் நற்செய்தியை பரப்புவதில் தேவனுடைய உதவியாளர் யார்"**

இந்த சொற்றொடர் தீமோத்தேயுவைக் குறிக்கிறது. கிரேக்க கையெழுத்துப் பிரதிகள் வேறுபடுகின்றன: கையெழுத்துப் பிரதி B இல் "இணை வேலையாள் " என்றும், கையெழுத்துப் பிரதிகள் ℵ மற்றும் Aயில் "ஊழியர்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இது ஒரு அடிமையின் தாழ்ந்த சேவையை குறிக்கிறது. பெரும்பாலான நவீன மொழிபெயர்ப்புகள் கையெழுத்துப் பிரதி Bயைப் பின்பற்றுகின்றன. தீமோத்தேயுவை "தேவனுடைய சக வேலையாள் " என்று பவுல் அழைத்ததைக் கண்டு ஒரு எழுத்தாளர் அதிர்ச்சியடைந்திருக்கலாம்.

இந்த வசனம் தீமோத்தேயுவுக்கு பரிந்துரைக்கப்பட்ட கடிதம் போல செயல்படுகிறது (ஓ'பா. அப்போஸ்தலர் 18:27; ரோமர் 16: 1; 2 கொரி. 8: 18-24; 3 யோவான் 9,10).

▣ **" உங்களை பெலப்படுத்தவும் ஊக்குவிக்கவும்"** பவுல் உபத்திரவத் தின்மத்தியில் இருந்த இந்த புதிய சபையைப் பற்றி கவலைப்பட்டார் (ஒ.பா. 1 தெச. 1: 6; 2:14; 3: 3).

**3:3 "இந்த உபத்திரவங்களினாலே ஒருவனும் தொந்தரவுக்கு உட்படக்கூடாதபடிக்கு."** புதிய ஏற்பாட்டில் "தொந்தரவு" என்ற வார்த்தையின் ஒரே பயன்பாடு இதுதான். இது ஒரு நாய் அதன் வால் அசைப்பதைக் குறிக்கிறது. பழங்கால கிரேக்க மொழியில் (Homer) (ஹோமர்), இது "பூரித்துப்போதல்" என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டது. "இது 1 தெச. 2: 1 அல்லது 3: 5 உடன் தொடர்புடையதாக இருக்கலாம். உண்மையான விசுவாசம் விடாமுயற்சியுடன் செயல்படும் (ஒ.பா. மத் 13: 1-23; கலா. 6: 9; வெளி 2: 2-3,7,11,17,19,26; 3: 5,8,10,11,12, 21). சிறப்பு தலைப்பு: கலா 3: 4 இல் விடாமுயற்சியின் அவசியம் பார்க்க.

▣ **"நாம் குறிக்கப்பட்டிருக்கிறோமென்று"** இது நிகழ்கால சாதாரணநிலை செயப்பாட்டுவினை (deponent- செயப்பாட்டுவினை அர்த்தத்தில்) சொல்லாகும். இந்த செயப்பாட்டு வினை தேவன் செயல்படுபவர் என்பதைக் குறிக்கிறது. இது ஆள்தத்துவமற்ற சக்தி பற்றிய பேகன் யோசனை அல்லது தீர்மானவாதம் பற்றிய இஸ்லாமிய யோசனை அல்ல. இந்த வீழ்ச்சியடைந்த உலகில் விசுவாசிகளுக்கு துன்பப்படல் என்பது ஒரு சாதாரண விடயமாகும் (ஒ.பா. 1 தெச. 3: 4; மத் 5: 10-12; யோவான் 15: 18, 20; 16:33; அப்போஸ்தலர் 14:22; ரோமர் 8:17 2 கொரி. 4: 7-11; 11: 23-27; 2 தீமோ. 3:12; 1 பேதுரு 2:21; 4: 12-16). துன்பப்படல் என்பது ஆவிக்குரிய முதிர்ச்சிக்கான ஒரு வழியாகும் (ஒ.பா. எபி. 5: 8).

**சிறப்பு தலைப்பு: ஏன் கிறிஸ்தவர்கள் துன்பபடுகிறார்கள்**
**SPECIAL TOPIC: WHY DO CHRISTIANS SUFFER?**

1. தனிப்பட்ட ரீதியான பாவம் காரணமாக (தற்காலிக தீர்ப்பு). எல்லா பிரச்சினைகளும், எதிர்மறையான சூழ்நிலைகளும் பாவத்தின் விளைவாக இருக்கின்றன என்பதை இது குறிக்கவில்லை (ஒ.பா. யோபு; சங்கீதம் 73; லூக்கா 14: 1-5; நெகேமியா 9; யோவான் 9; அப்போஸ்தலர் 5: 1-11; 1 கொரி. 11: 29-. 30; கலா. 6: 7).

2. கிறிஸ்தவத்தன்மையை வளர்ப்பதற்கு (எபி. 5: 8). மனித ரீதியாக பேசினால் இயேசு கூட முதிர்ச்சியடைய வேண்டியிருந்தது, ஆகவே அவருடைய சீஷர்களாகிய நாமும் ஆகவேண்டும் (ஒ.பா. ரோமர் 5: 3-4, 8: 28-29; 2 கொரி. 12: 7-10; பிலி. 3:10; எபி. 12: 5-12; யாக்கோபு 1: 2-4; 1 பேது. 1: 7).

3. வல்லமை மிகுந்த, பயனுள்ள சாட்சியை வளர்ப்பதற்கு (ஒ.பா. மத் 5: 10-12; யோவான் 15: 18-22; 1 பேதுரு 2: 18-21, 3: 13-17).

4. புதிய யுகத்தின் பிரசவ வேதனைக்கு அடையாளமாக (ஒ.பா. மத் 24: 6; மாற்கு 13: 8).

இந்த வீழ்ச்சியடைந்த உலகின் அநியாயத்தையும் தீமையையும் சமாளிக்க எனக்கு உதவிய இரண்டு புத்தகங்கள் ஹன்னா விட்டால் ஸ்மித் (Hannah Whithall Smith), எழுதிய ***The Christian's Secret of a Happy Life*** மற்றும் ஜான் டபிள்யூ. வென்ஹாம் (John W. Wenham), எழுதிய ***The Goodness of God***

தேவனின் கோபத்தின் அல்லது நிராகரிப்பின் அடையாளம் பிரச்சினைகளும் துன்பங்களும் அல்ல என்பதை விசுவாசிகள் நினைவில் கொள்ள வேண்டும். வீழ்ச்சியடைந்த உலகில் உண்மையுள்ளவர்களாய் பின்பற்றுபவர்களுக்கும் தீய காரியங்கள் நிகழ்கின்றன (ஒ.பா. 1 பேதுரு 4: 12-19). தேவனின் வாக்குறுதிகள்

மற்றும் கிறிஸ்துவின் தன்னையே பலியாக்கிய மரணம் ஆகியவை தேவனின் அன்பின் அறிகுறிகளாகும் (ஒ.பா. ரோமர் 5: 8). வேதம் தற்காலிக சூழ்நிலைகளுக்கு மேலே முன்னுரிமை பெற வேண்டும்!

Copyright © 2014 Bible Lessons International

**3:4 "முன்கூட்டியே உங்களுக்குச் சொல்லிக்கொண்டிருந்தோம்**" இது ஒரு முற்றா வினையாகும், அதாவது கடந்த காலத்தில் மீண்டும் மீண்டும் நடபிக்கப்படுகிறதை குறிக்கின்றது. சுவிசேஷத்துடன் இணைக்கப்பட்ட உபத்திரவங்கள் மற்றும் துன்புறுத்தல் குறித்து பவுல் அவர்களுக்கு பலமுறை எச்சரித்திருக்க வேண்டும். இயேசுவின் போதனைகள் மற்றும் தனிப்பட்ட அனுபவங்களிலிருந்து அவர் இதை அறிந்திருந்தார். அவர்கள் இப்போது அதை அனுபவ ரீதியாகவும் அறிவார்கள்.

**NASB "நாங்கள் உபத்திரவத்தை அனுபவிக்கப் போகிறோம்"**
**NKJV "நாங்கள் இன்னல்களை அனுபவிப்போம்"**
**NRSV "நாங்கள் துன்புறுத்தல்களுக்கு ஆளானோம்"**
**TEV "நாங்கள் துன்புறுத்தப்படப் போகிறோம்"**
**NJB "நாங்கள் துன்புறுத்தப்படுதலைத் தாங்க எதிர்பார்க்க வேண்டும்**"

இது நிகழ்கால சாதாரணநிலை செய்வினையுடனான நிகழ்கால செயப்பாட்டு வினையெச்ச சொல்லாகும். வில்லியம்ஸின் மொழிபெயர்ப்பின் அடிக்குறிப்பு இதனை பின்வருமாறு விளக்குகின்றது. "அதிக சுமையை சுமத்தப்பட்ட வாகனம் அதன் அதிக சுமையின் காரணமாக நொறுக்கப்பட்டமை"

**3:5 "உங்கள் விசுவாசத்தை**" இது பழைய ஏற்பாட்டின் அர்த்தத்தில் "உண்மைதத்துவம்" என பயன்படுத்தபட்டிருக்கலாம். அவர்கள் விசுவாசத்தைக் காப்பதில் உண்மையாக இருந்தார்களா? கலா 3: 6 இல் சிறப்பு தலைப்பைக் காண்க.

▣ **"சோதனைக்காரன் உங்களைச் சோதனைக்குட்படுத்தினதுண்டோவென்று**" ஒரு தனிப்பட்ட ரீதியில், நம் உலகிலும் நம் வாழ்க்கையிலும் தீய சக்தி (*ho peirazōn)* செயலில் உள்ளது (ஒ.பா. 1 தெச. 2:18). "தூண்டப்படல்" (*peirazō*) என மொழிபெயர்க்கப்பட்ட இந்த கிரேக்க வார்த்தை "அழிவை நோக்கிய பார்வையுடன்" சோதனையை குறிக்கிறது, இது 1 தெச. 2: 4ல் உள்ள "அங்கீகரிக்கப்பட்ட" (*dokimazō*) க்கு நேர் எதிரானது. 1 தெச. 2:18 சிறப்பு தலைப்பு: தனிப்பட்ட தீமை - பார்க்கவும்.

**சிறப்பு தலைப்பு: சோதனைக்கான கிரேக்க சொற்கள் மற்றும் அவற்றின் அர்த்தங்கள்**
**SPECIAL TOPIC: GREEK TERMS FOR TESTING AND THEIR CONNOTATIONS**

இங்கு இரண்டு கிரேக்க சொற்கள் உள்ளன, அவை ஒருவரை ஒரு நோக்கத்திற்காக சோதிக்கும் அர்த்தத்தைக் கொண்டுள்ளன.

1. *Dokimazō, Dokimion, Dokimasia*

இந்த சொல் எதையாவது (உதாரணமாக, உருவகமாக ஒருவரை) நெருப்பால் சோதிப்பதற்கான ஒரு உலோகவியலாளர் பதமாகும் (சிறப்பு தலைப்பு: நெருப்பு

பார்க்கவும்). நெருப்பு கசடுகளை எரித்து உண்மையான உலோகத்தை வெளிப்படுத்துகிறது (உதாரணமாக, சுத்திகரிக்கிறது). இந்த பௌதீக செயல்முறை தேவன் மற்றும் / அல்லது சாத்தான் மற்றும் / அல்லது மனிதர்கள் மற்றவர்களை சோதிக்கும் ஒரு சக்திவாய்ந்த மரபுத்தொடராக தோற்றம்பெற்றது. இந்த சொல் சோதனைக்கான நேர்மறையான அர்த்தத்தில் ஏற்றுக்கொள்ளும் நோக்கில் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது (சிறப்பு தலைப்பு: கடவுள் தனது மக்களை சோதிக்கிறார் [பழைய ஏற்பாடு]).

இது புதிய ஏற்பாட்டில் சோதனைக்குப் பயன்படுத்தப்படுகிறது

a. தேர்மாடு - லூக்கா 14:19
b. தன்னைத்தானே - 1 கொ. 11:28
c. எங்கள் விசுவாசம் - யாக்கோபு. 1: 3
d. தேவனை கூட - எபி. 3:9

இந்த சோதனைகளின் இறுதி அர்த்தம் நேர்மறையானவை என்று கருதப்பட்டது (ஒ.பா. ரோமர் 2:18; 14:22; 16:10; 2 கொரி. 10:18; 13: 3,7; பிலி. 2:27; 1 பேதுரு 1 : 7) ஆகையால், இந்த சொல் ஒருவர் பரிசோதிக்கப்படல் மற்றும் அங்கீகரிக்கப்படல் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது.

a. பயனுள்ளதாக இருக்கும்
b. நன்றாக இருக்க வேண்டும்
c. உண்மையானதாக இருக்க வேண்டும்
d. மதிப்புமிக்கதாக இருக்க வேண்டும்
e. கனம்பண்ணப்பட வேண்டும்.

2. *Peirazō, Peirasmus*

இப்பதம் பெரும்பாலும்தவறு கண்டுபிடிப்பது அல்லது நிராகரிக்கும் நோக்கத்திற்கான பரீட்சையின் அர்த்தத்தைக் கொண்டுள்ளது. வனாந்தரத்தில் இயேசுவின் சோதனையுடன் இப்பதம் தொடர்புப்படுகிறது.

a. இது இயேசுவை சிக்க வைக்கும் முயற்சியை வெளிப்படுத்துகிறது (ஒ.பா. மத் 4: 1; 16: 1; 19: 3; 22:18, 35; மாற்கு 1:13; லூக்கா 4: 2; எபி. 2:18).
b. இந்த சொல் *(peirazōn)* மத். 4: 3 ல் சாத்தானுக்கு ஒரு தலைப்பாக பயன்படுத்தப்படுகிறது; 1 தெச. 3: 5 (உதாரணமாக, "சோதனைகாரன்").
c. பயன்பாடு
   (1). இயேசுதேவனை சோதிக்க வேண்டாம் என்று மனிதர்களை எச்சரித்தார் (ஒ.பா. மத். 4: 7; லூக்கா 4:12, [அல்லது கிறிஸ்துவை ஒ.பா. 1 கொரி 10: 9]).
   (2). தோல்வியுற்ற ஒன்றைச் செய்வதற்கான முயற்சியையும் இது குறிக்கிறது (ஒ.பா. எபி 11: 29).
   (3). விசுவாசிகளின் துன்பங்களும் சோதனைகளும் தொடர்பாக இது பயன்படுத்தப்படுகிறது (ஒ.பா. 1 கொரி. 7: 5; 10: 9, 13; கலா. 6: 1; 1 தெச. 3: 5; எபி. 2:18; யாக்கோபு. 1: 2, 13, 14; 1 பேதுரு 4:12; 2 பேதுரு 2: 9).

Copyright © 2014 Bible Lessons International

▣ **"எங்கள் வேலை வீணாய்ப் போகத்தக்கதாக**" வினை சொல்லின் நிலைகளின் பயன்பாடு இங்கே முக்கியமானதாகும்; யதார்த்தத்தின் நிலையான சாதாரணநிலை சாத்தானுக்கு பயன்படுத்தப்படுகிறது, ஆனால் ஒரு தற்செயலின்/எதிர்பாரா நிலையான விருப்பநிலை பவுலின் ஊழியத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. இது 2: 1 உடன் தொடர்புடையதாக இருக்கலாம். கேள்வி என்னவென்றால், "வீணாக" எனும்

போது அவர்களின் தனிப்பட்ட மாற்றத்துடனோ அல்லது தெசலோனிகாவில் செயல்படக்கூடிய ஒரு சபையை நிறுவுவதற்கோ தொடர்புடையதா? " பிந்தையதே சிறந்த சூழ்நிலை என்று நான் நினைக்கிறேன், இருப்பினும் பவுல் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தியிருக்க மாட்டார்.

பவுல் "வீண்" அல்லது "பலனற்ற" என்ற பதத்தின் கருத்தை அடிக்கடி பயன்படுத்துகிறார், மேலும் மூன்று வெவ்வேறு சொற்களை இணைக்கிறார்.

1. *eikē* - ரோம். 13: 4; 1 கொ. 15: 2; கால். 3: 4; 4:11; கொலோ 2:18
2. *kenos* - 1 கொ. 15: 10,14,58; 2 கொ. 6: 1; கலா. 2: 2; எஃப். 5: 6; பில். 2:16; கொலோ 2: 8; 1 தெச. 2: 1; 3: 3(2 கொரி. 9: 3-ல் உள்ள வினை)
3. *matalos*- 1 கொ. 3:20; 15:17; தீத்து 3: 9 (ரோமர் 2:21 இல் வினைச்சொல்)

சுவிசேஷத்தின் வல்லமை தெய்வீக செயலிலிருந்து வந்தது என்பதை பவுல் அறிந்திருந்தார், ஆனால் மனிதர்களின் தெரிவுகள் பயனுள்ள விளைவை பாதிக்கின்றன என்பதையும் அவர் அறிந்திருந்தார்!

**3:6 "நற்செய்தி**" புதிய ஏற்பாட்டில் இந்த கிரேக்க வார்த்தையின் ஒரே பயன்பாடு இதுதான், இது கிறிஸ்துவின் நற்செய்தியைக் குறிக்கவில்லை. இந்த சபையின் உண்மைதத்துவ நிலை பற்றிய செய்தியே பவுலுக்கான "நற்செய்தி", "சுவிசேஷமாகும்".

▣ **"உங்கள் விசுவாசத்தையும் அன்பையும்**" இந்த சொற்றொடருக்கு பல அர்த்தங்கள் இருக்கலாம் (ஒ.பா. 1 தெச. 1: 3). இது பின்வருவனவற்றைக் குறிக்கிறது: (1) மரபுவழி கோட்பாடு மற்றும் ஒருவருக்கொருவர் அன்பான கவனிப்பு அல்லது (2) தேவன் மீதான உண்மைத்துவமும் அன்பும்.

▣ **"பட்சமாய் நினைத்துக் கொண்டு, நாங்கள் உங்களைக் காண வாஞ்சையாய் இருக்கிறதுபோல நீங்களும் எங்களைக் காண வாஞ்சையாய் இருக்கிறீர்கள் என்பதைக்குறித்தும்**" பவுலுக்கு எதிராக துன்புறுத்தல் அல்லது கள்ளப் போதகர்கள் இந்த சபையைத் தூண்டவில்லை என்பதை இது காட்டுகிறது.

**3:7 "எல்லா இக்கட்டிலும் உபத்திரவத்திலும்**" கொரிந்துவில் பவுலின் பிரச்சினைகள் பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளன. 1 கொரி. 4: 9-13; 2 கொ. 4: 7-12; 6: 4-10 மற்றும் 11: 23-28. ஓ! கிறிஸ்துவின் ஊழியராக இருப்பதற்கான செலவுகள்!!

▣ "**நாங்கள் ஆறுதலடைந்தோம்**" பவுல் இந்த கூட்டு வார்த்தையை ("உடன்" மற்றும் "அழைப்பு") அடிக்கடி பயன்படுத்துகிறார். இது பல உணர்வுகளைக் கொண்டுள்ளது.

1. தூண்டுதல், போதனைகள், ஊக்குவித்தல் (ஒ.பா. 1 தெச. 2: 3,11; 4: 1; 5:14; 2 தெச. 3:12)
2. ஆறுதலுக்கு (ஒ.பா. 1 தெச. 2:11; 3: 2; 4:18; 5:11; 2 தெச. 2:17)
3. அதன் பெயர்ச்சொல் வடிவம் (paraclētos) ஆவியின் உதவி ஊழியம் (ஒ.பா. யோவான் 14: 16,26; 15:26; 16: 7) மற்றும் குமாரன் (ஒ.பா. 1 யோவான் 2: 1) என்ற இரண்டையும் பயன்படுத்துகிறது.

**3:8 "நாங்கள் பிழைத்திருப்போம்**" பவுல் இந்த சபையைப் பற்றிய நற்செய்தியின் காரணமாக ஏற்பட்ட பதற்றத்திலிருந்து விடுபட்டத்தை வெளிப்படுத்த உருவக மொழியைப் பயன்படுத்துகிறார்.

▣ **"நீங்கள் கர்த்தருக்குள் உறுதியாக நிலைத்திருந்தால்**" இது ஒரு கிரேக்க நிபந்தனை வாக்கியமாகும், இது முதல் வகுப்பு மற்றும் மூன்றாம் வகுப்பை இணைக்கிறது, பவுலின் கூற்றுக்கு இதன் மூலம் ஒரு தற்செயல் நிலை சேர்க்கிறது. அவர்கள் உறுதியாக நிற்பார்கள் என்று அவர் கருதினார், அதுபோலவே அதை அவருக்குப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. (ஒ.பா.1 தெச. 2: 1 மற்றும் 3: 5).

"உறுதியான நிலை" என்பது கிறிஸ்துவில் நம்முடைய நிலைப்பாட்டோடு தொடர்புடையது. வேதாகமம் நம் இரட்சிப்பை பதற்றம் நிறைந்த ஒரு ஜோடி சத்தியங்களில் முன்வைக்கிறது: (1) இது இலவசம், இது கிறிஸ்துவில் உள்ளது, ஆனால் (2) இது கிரயம் கொண்டது, இது முற்போக்கானது, இது நம் வாழ்வின் தெரிவுகளில் காணப்படுகிறது (மத்தேயு 7; யாக்கோபு, 1 யோவான்). இரண்டும் உண்மை. இந்த வசனம் முதல் சத்தியத்தை வலியுறுத்துகிறது (ஒ.பா. ரோமர் 5: 2; 1 கொரி. 15: 1 மற்றும் எபே 6:11, 13).

**3:9-10** இது ஒரு சிந்தையைத் தூண்டும் கேள்வியாகும், இது ஜெபத்திற்கு வழிவகுக்கிறது, 1 தெச. 3: 11-13, பவுலின் கடிதத்தின் முதல் பாதி இங்கு முடிக்கிறது.

**3:10 "இரவும் பகலும்"** இது யூதர்களின் நேர வரிசையாகும் (1 தெச. 2: 9-ல் உள்ள குறிப்பைக் காண்க). இது பவுலின் நிலையான, தொடர்ச்சியான ஜெப வாழ்க்கையை பிரதிபலிக்கிறது (ஒ.பா. 1 தெச. 1: 2; 2:12; 2 தீமோ. 1: 3).

**NASB "மிகவும் ஆர்வத்துடன் ஜெபிக்கும்போது"**
**NKJV "மிகவும் வேண்டிக்கொள்கிறோமே"**
**NRSV "நாங்கள் மிகவும் ஆர்வத்துடன் ஜெபிக்கிறோம்"**
**TEV "நாங்கள் அவரை முழு மனதுடன் கேட்கிறோம்"**
**NJB "நாங்கள் ஆர்வத்துடன் ஜெபிக்கிறோம்"**

"மிகவும் ஆர்வத்துடன்" என்ற வினையுரிச்சொல் மிகவும் வலுவான, மூன்று கலவை கொண்ட (huper + ek + perissou), உணர்ச்சிபூர்வமான சொல்லாகும் (ஒ.பா. எபே. 3:20; 1 தெச. 3:10; 5:13). பவுல் இந்த புதிய சபைகளைப் பற்றி கவலைப்பட்டு ஜெபம் செய்தார் (ஒ.பா.2 கொரி. 11:28). சிறப்பு தலைப்பைக் காண்க: ஹூப்பர் கூட்டு சொற்கள் பயன்பாடு (*Paul's Use of Huper Compounds*) கலா.1:13.

**NASB "உங்கள் விசுவாசத்தின் குறைவுகளை நிறைவுசெய்ய"**
**NKJV "உங்கள் விசுவாசத்தின் குறைவுகளை நிறைவாக்கும்பொருட்டு"**
**NRSV "உங்கள் விசுவாசத்தின் குறைவுகளை மீள்நிரப்ப"**
**TEV "உங்கள் விசுவாசத்திற்கு தேவையானதை வழங்க"**
**NJB "உங்கள் விசுவாசத்தின் ஏதேனும் குறைபாடுகளைச் ஈடு செய்ய"**

அவர்கள் சிறப்பாகச் செயல்பட்டார்கள், ஆனால் அவர்கள் இன்னும் புரிந்துகொள்ளுவதில் முதிர்ச்சியடையவில்லை, இதனை இரண்டாவது வருகையைப் பற்றிய தவறான புரிதல் காட்டுகிறது. இது விசுவாசத்தை (1) கோட்பாடாகப் பயன்படுத்துவதும் (ஒ.பா. 1 தெச. 4: 13-5: 11) அல்லது (2) வாழ்க்கை முறைக்கு தொடர்ந்து முக்கியத்துவம் கொடுப்பதும், "குறைவுகளை" ஒரு நெறிமுறை அம்சத்தைக் கொண்டிருந்திருக்கலாம் (ஒ.பா. 1 தெச. 4: 1-12) என பயன்படுத்தப்பட்டுள்ளது. பவுல் இந்த கடிதங்களில் விசுவாசம் (pistis/pisteuō) என்ற வார்த்தையை அடிக்கடி பயன்படுத்துகிறார் (ஒ.பா. 1 தெச. 1: 3,8; 3: 2,5,6,7,10; 5: 8; 2 தெச. 1: 3,4, 11; 3: 2), ஆனால் குறிப்பாக இந்த சூழலில். கலா. 3:6ல் உள்ள சிறப்பு தலைப்பைக் காண்க.

**NASB (புதுப்பிக்கப்பட்ட) வார்த்தை: 1 தெசலோனிக்கேயர் 3:11-13**

**[11.] நம்முடைய பிதாவாகிய தேவனும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் உங்களிடத்திற்கு எங்களை நேராக வழிநடத்துவாராக. [12]நாங்கள் உங்களிடத்தில் வைத்திருக்கிற அன்புக்கொப்பாய், நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும்**

**அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும், நிரம்பி வழியவும் செய்து, [13.] இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக**.

**3:11-13** இது ஒரு கிரேக்க மொழியில் வாக்கியம். இந்த ஜெபத்தில் மூன்று அரிய பார்வை வாய்மொழி வடிவங்கள் உள்ளன: "நேரடியாக" (1 தெச. 3:11), "பெருக்கம்" (வ .12) மற்றும் "நிலைத்திருத்தல்" (வ .12). இவ்வியங்கோள் நிலை என்பது பிரார்த்தனைகளில் பயன்படுத்தப்படும் சாத்தியமான நிலையாகும்.

**3:11 "நேராக வழிநடத்துவாராக**" இது புதிய ஏற்பாட்டில் பல ஜெபங்களில் பயன்படுத்தப்படும் ஒரு அரிய இறந்தகால ஒற்றை வியங்கோள் செய்வினைச் சொல்லாகும் (ஒ.பா. 1 தெச. 5:23; 2 தெச. 2:16; 3: 5, 16 மற்றும் ரோமர் 15: 5-6, 13). இந்த வினைச்சொல் ஒருமை என்பதை நினைவில் கொள்க, இருப்பினும் இது பிதாவாகிய தேவன் மற்றும் இயேசு கிறிஸ்து ஆகிய இருவரையும் குறிக்கிறது. புதிய ஏற்பாட்டின் ஆசிரியர்கள் நாசரேத்தின் இயேசுவின் தெய்வீகத்தை உறுதிப்படுத்தியஒரு வழியாகும் (ஒ.பா. 1 தெச. 1: 1; 2 தெச. 2:16).

மற்றொரு இறையியல் அம்சம் என்னவென்றால், 1 தெச 2:18-ல் பதிவு செய்யப்பட்டுள்ள பவுல் அவர்களிடம் வருவதை சாத்தான் தடுத்தது போலவே, பவுல் அவர்களைப் பார்க்க ஒரு வழியைச் செய்யும்படி பிதாவையும் குமாரனையும் கேட்டார் (நேராக அல்லது சுமூகமாக: (ஒ.பா. லூக்கா 1:79)!

▣ **"பிதா**" கலா 1: 1 இல் சிறப்பு தலைப்பைக் காண்க.

**3:12-13** 1 தெச 3: 11-ல் பவுல் தனக்காக ஜெபித்தார், ஆனால் இப்போது அவருடைய விண்ணப்பம் தெசலோனிகேய சபையை நோக்கி திரும்பியது. அவர் அனைவரும் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்க ஜெபித்தார் (ஒ.பா. எபே 6:18). அவர் விசுவாசிகளின் பரிசுத்தத்திற்காக ஜெபித்தார் (ஒ.பா. 1 தெச. 3:13; எபே 1: 4). ஒவ்வொரு விசுவாசியையும் குறித்த தேவனுடைய சித்தம் கிறிஸ்துவின் சாயலாதலாகும் (ஒ.பா. ரோமர் 8: 28-29; கலா. 4:19).

▣ **"பெருகவும்**" சிறப்பு தலைப்பு பின்வருமாறு.

### சிறப்பு தலைப்பு: பெருக்கம் *(perisseuō)*
### SPECIAL TOPIC: ABOUND *(perisseuō)*

பவுல் பெரும்பாலும் இந்த வார்த்தையை பயன்படுத்துகிறார். இது அதிகப்படியாக நிரப்புவதைக் குறிக்கிறது (உதாரணமாக, ஒரு நேர்மறையான உணர்வு).

1. தேவனின் சத்தியம் அவருடைய மகிமைக்கு அதிகப்படியாக நிரம்பியிருக்கிறது, ரோமர். 3: 7
2. இயேசுகிறிஸ்து என்னும் ஒரே மனுஷனுடைய கிருபையினாலே வரும் ஈவும் அநேகர்மேல் அதிகமாய்ப் பெருகியிருக்கிறது. ரோ. 5:15
3. விசுவாசிகள் நம்பிக்கையில் பெருகி இருக்கிறார்கள், ரோ. 15:13
4. விசுவாசிகள் சில உணவுகளை சாப்பிடுவதன் மூலமோ அல்லது

சாப்பிடாமலோ தேவனை மேன்மைப் பாராட்டுவதில்லை, 1 கொரி. 8: 8 (ஒ.பா. மாற்கு 7: 15,17-23)

5. விசுவாசிகள் சபையை கட்டியெழுப்புவதில் ஏராளமாக உள்ளனர், 1 கொரி. 14:12
6. விசுவாசிகள் கர்த்தருடைய ஊழியத்தில் பெருகுகிறார்கள், 1 கொரி. 15:58
7. விசுவாசிகள் கிறிஸ்துவின் துன்பத்திலும், கிறிஸ்துவின் ஆறுதலிலும் ஏராளமாகப் பங்கு கொள்கிறார்கள், 2 கொரி. 1: 5
8. நீதியைக் கொடுக்கும் ஊழியம் மகிமையில் நிறைந்துள்ளது, 2 கொரி. 3: 9
9. விசுவாசிகளின் ஸ்தோத்திரத்தினாலே தேவனின் மகிமைப் பெருகும், 2 கொரி. 4:15
10. விசுவாசிகளின் ஏராளமான சந்தோஷம், 2 கொ. 8: 2
11. விசுவாசிகள் எல்லாவற்றிலும் (விசுவாசம், சொல், அறிவு, ஆர்வம், அன்பு) ஏராளமாக பெருகி இருந்தார்கள், எருசலேம் தேவாலயத்திற்கான தர்மகாரியத்திலும் பெருகவேண்டும், 2 கொரி. 8: 7
12. சகலவித கிருபையையும் பெருகி இருக்கிறது, 2 கொரி. 9: 8
13. அநேக விசுவாசிகள் தேவனை ஸ்தோத்திரிப்பதினாலே, 2 கொரி. 9:12
14. தேவனுடைய கிருபையின் ஐசுவரியத்தை விசுவாசிகளிடத்தில் பெருகப்பண்ணினார், எபே. 1: 8
15. விசுவாசிகளின் அன்பு இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும், பிலி. 1: 9
16. விசுவாசிகளின் பவுல் மீதான நம்பிக்கை கிறிஸ்துவில் நிறைந்துள்ளது, பிலி. 1:26
17. ஏராளமாக இருப்பது, பில். 4: 12,18
18. விசுவாசிகள் ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக, கொலோ 2: 7
19. விசுவாசிகள் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துகிறார்கள், பெருகுகிறார்கள், 1 தெச. 3:12
20. தேவபக்தியுள்ள வாழ்க்கை முறையில் அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு, 1 தெச. 4: 1
21. சக விசுவாசிகள் மீது அன்பு பெருக, 1 தெச. 4:10

கிறிஸ்துவுக்குள் தேவனின் கிருபையைப் பற்றிய பவுலின் புரிதல் "மிகவும் அதிகமாய்" இருந்தது. எனவே, விசுவாசிகள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் "மிகவும் அதிகமான" கிருபையிலும் அன்பிலும் நடக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது!

Copyright © 2014 Bible Lessons International

▣ **"மற்றெல்லா மனுஷரிடத்தில்**" தேவனின் அன்பு உலகத்தைப் போலவே அகலமானது (ஒ.பா. யோவான் 1:29; 3:16; 1 தீமோ. 2: 4; 2 பேதுரு 3: 9); எனவே, அவரை அறிந்தவர்கள் நம்முடையவர்கலே.

**3:13 "இருதயங்களை"** கலா 4:6 இல் சிறப்பு தலைப்பைக் காண்க.

**NASB "பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி"**
**NKJV "பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி"**
**NRSV, NJB "நீங்கள் பரிசுத்தத்தில் குற்றமற்றவர்களாக இருக்க"**
**TEV "சரியான மற்றும் பரிசுத்தத்தில்"**

பரிசுத்தத்தன்மை என்பது ஒரு வரம் மற்றும் செயல்பாடு (சாதாரணநிலை மற்றும் வேண்டுகோள் நிலை) ஆகும். இது ஒருவரின் நிந்தைக்கு மேலாக, எதிராக எந்த குற்றச்சாட்டும் வரக்கூடாத ஒரு குணவியல்பாகும். (ஒ.பா. எபே 5:27). இந்நிலை சாத்தானுக்கு விமர்சனம் செய்வதற்கு எந்த அடிப்படையும் இல்லாமல் போகிறது (ஒ.பா. ரோமர் 8: 31,32,33). ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவனுடைய சித்தம் கிறிஸ்துவைப் போன்ற பரிசுத்தமாகும் (ஒ.பா. 1 தெச. 4: 3; ரோமர் 8: 28-29; கலா. 4:19; எபே. 1: 4). 2 தெச 4: 3 இல் குறிப்பைக் காண்க. 1 தெச. 2:12ல் சிறப்பு தலைப்பு: குற்றமற்ற, பாவமுமறியாத, குற்றமில்லா, கில்லாஸ், நிந்தனை இல்லாமல், காண்க. 1 தெச 4: 3 இல் சிறப்பு தலைப்பு: புதிய ஏற்பாட்டு பரிசுத்தத்தன்மை / பரிசுத்தப்படுத்தல். காண்க.

▣ **"கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது**" இது பவுலின் கடைசிகால நிகழ்வுகளைப் பற்றி தொடர்ச்சியான அக்கறையைக் காட்டுகிறது (ஒ.பா.1 தெச. 2:19; 4: 15-17; மேலும் 2 தெசலோனிக்கேயர் 2).

இரண்டாவது வருகை, எடுத்துக்கொள்ளப்படல் (ஒ.பா. 1 தெச. 4: 13-18), கிறிஸ்துவின் நியாய தீர்ப்பு சிம்மாசனம் (ஒ.பா. 2 கொரி. 5:10) மற்றும் நியாயதீர்ப்பின் வெள்ளை சிம்மாசனம் (ஒ.பா. மத் 25 மற்றும் வெளி 20) இவற்றுக்கிடையிலான தொடர்புகள் நிச்சயமற்றதாகக் காணப்படுகின்றது. பவுல் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட இறையியலாளர் அல்ல. கீழே சிறப்பு தலைப்பைக் காண்க.

**SPECIAL TOPIC: NT TERMS FOR CHRIST'S RETURN**
**சிறப்பு தலைப்பு: கிறிஸ்துவின் மறு வருகைக்கான புதிய ஏற்பாட்டு சொற்கள்**

இறுதியியல் பார்வையில் இயேசுவை மனிதர்கள் (இரட்சகராகவும் நியாயதிபதியாகவும்) சந்திக்கும் அந்த வரவிருக்கும் ஒரு சிறப்பு நாள் பல பெயர்களால் கம்பிக்கப்படுகிறது.

1. "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாள்" (ஒ.பா. 1 கொரி. 1: 8)
2. "கர்த்தருடைய நாள்" (ஒ.பா. 1 கொரி. 5: 5; 1 தெச. 5: 2; 2 தெச. 2: 2)
3. "கர்த்தராகிய இயேசுவின் நாள்" (ஒ.பா. 2 கொரி. 1:14; MS א அதை கொண்டுள்ளது 1 கொரி. 5: 5 இல் உள்ளது)
4. "இயேசு கிறிஸ்துவின் நாள்" (ஒ.பா. பிலி. 1: 6)
5. "கிறிஸ்துவின் நாள்" (ஒ.பா. பிலி. 1:10; 2:16)
6. "அவருடைய நாள் (மனுஷகுமாரன்)" (ஒ.பா. லூக்கா 17:24)
7. "மனுஷகுமாரன் வெளிப்படும் நாள்" (ஒ.பா. லூக்கா 17:30)
8. "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாடு" (ஒ.பா. 1 கொரி. 1: 7)
9. "கர்த்தராகிய இயேசு பரலோகத்திலிருந்து வெளிப்படும் போது" (ஒ.பா. 2 தெச. 1: 7)
10. "கர்த்தராகிய இயேசு வருகையில் அவர் முன்னிலையில்" (ஒ.பா. 1 தெச. 2:19)

இயேசுவின் வருகையை பற்றி புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் குறிப்பிடுவதற்கு குறைந்தது நான்கு வழிகள் உள்ளன.

1. *epiphaneia,* இது பளபளப்பான திகைப்பூட்டும் பிரகாசத்தைக் குறிக்கிறது, இது இறையியல் ரீதியாக (சொல்லியல் ரீதியாக இல்லாவிட்டாலும்) "மகிமை" உடன் தொடர்புபடுகின்றது. 2 தீமோ 1:10; தீத்து 2:11 மற்றும் 3: 4 இது இயேசுவின் முதல் வருகையையும் (உதாரணமாக மனிதனானர்) அவருடைய இரண்டாவது

வருகையையும் குறிக்கிறது. இது 2 தெச 2: 8 இல் பயன்படுத்தப்படுகிறது, இதில் இரண்டாவது வருகைக்கான மூன்று முக்கிய சொற்களும் அடங்குகிறது: 1 தீமோ. 6:14; 2 தீமோ. 4: 1,8; தீத்து 2:13.

2. *parousia*, இது பிரசன்னத்தையும், ஒரு இராஜாவின் வருகையையும் குறிக்கிறது. இது மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படும் சொல்லாகும் (ஒ.பா. மத் 24: 3,27,37,39; 1 கொரி. 15:23; 1 தெச. 2:19; 3:13; 4:15; 5:23; 2 தெச. 2: 1,8; யாக்கோபு 5: 7,8; 2 பேதுரு 1:16; 3: 4,12; 1 யோவான் 2:28).
3. *apokalupsis* (or *apocalypsis*), எனும் சொல் வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக ஒரு திறத்தல் எனும் அர்த்தத்தை சொல்கின்றது. இது புதிய ஏற்பாட்டின் கடைசி புத்தகத்தின் பெயராகும் (ஒ.பா. லூக்கா 17:30; 1 கொரி. 1: 7; 2 தெச. 1: 7; 1 பேது. 1: 7; 4:13).
4. *phaneroō*, அதாவது வெளிச்சத்திற்கு கொண்டு வருவது அல்லது தெளிவாக வெளிப்படுத்துவது அல்லது காண்பிப்பது. தேவனின் வெளிப்பாட்டின் பல அம்சங்களுக்காக இந்த சொல் புதிய ஏற்பாட்டில் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. இது, *epiphaneia*வைப் போலவே, கிறிஸ்துவின் முதல் வருகையையும் (ஒ.பா.1 பேதுரு 1:20; 1 யோவான் 1: 2; 3: 5,8; 4: 9) மற்றும் அவருடைய இரண்டாவது வருகையையும் குறிக்க முடியும் (மத் 24:30; கொலோ 3: 4; 1 பேது. 5: 4; 1 யோவான் 2:28; 3: 2).
5. "வருகை," erchomai என்ற பொதுவான சொல் கிறிஸ்துவின் வருகைக்கு அவ்வப்போது பயன்படுத்தப்படுகிறது (ஒ.பா. மத் 16: 27-28; 23:39; 24:30; 25:31; அப்போஸ்தலர் 1: 10-11; 1 கொரி. 11:26; வெளி 1: 7,8).
6. இது "கர்த்தருடைய நாள்" (ஒ.பா. 1 தெச. 5: 2) என்ற சொற்றொடருடன் பயன்படுத்தப்படுகிறது, இது தேவனின் ஆசீர்வாதம் (உயிர்த்தெழுதல்) மற்றும் நியாயதீர்ப்புக்கான நாள் என பழைய ஏற்பாட்டில் காண்பிக்கிறது.

ஒட்டுமொத்தமாக புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டின் உலகக் கண்ணோட்டத்திற்குள் எழுதப்பட்டுள்ளது

a. தற்போதைய தீயது நிறைந்த, கலக காலம்
b. வருகின்ற நீதியின் புதிய காலம்
c. மேசியாவின் (அபிஷேகம் செய்யப்பட்டவர்) ஊழியத்தின் மூலம் ஆவியின் பணியாள் கொண்டுவரப்பட்ட ஒரு காலம்

இங்கு முற்போக்கான வெளிப்பாட்டின் இறையியல் அனுமானம் தேவைப்படுகிறது, ஏனெனில் புதிய ஏற்பாட்டின் ஆசிரியர்கள் இஸ்ரேலின் எதிர்பார்ப்பை சற்று மாற்றியமைக்கின்றனர். மேசியாவின் இராணுவ, தேசியவாத (இஸ்ரேல்) வருகைக்கு பதிலாக, இரண்டு வருகைகள் உள்ளன. முதல் வருகை நாசரேனாகிய இயேசுவின் கருத்தரிக்கப்பட்டதிலும் பிறப்பிலும் தெய்வத்தின் மனு அவதாரம் ஆகும். அவர் ஏசாயா 53 இன் படி இராணுவமற்ற, நீதித்துறை அல்லாத "பாடுபடும் ஊழியராக" வந்தார்; சக். 9:9 இன் படி கழுதைகுட்டியின்மேல் (ஒரு போர் குதிரை இராஜ குதிரை அல்ல) தாழ்மையாய் சவாரி செய்தார். முதல் வருகை புதிய மெசியாவின் யுகத்தையும், பூமியில் தேவனுடைய ராஜ்யத்தையும், திறந்து வைத்தது (சிறப்பு தலைப்பு: தேவனின் ராஜ்யம் பார்க்கவும்). ஒரு அர்த்தத்தில் ராஜ்யம் இங்கே உள்ளது எனலாம், ஆனால் நிச்சயமாக, இன்னொரு விஷயத்தில் அது இன்னும் தொலைவில் தான் உள்ளது. மேசியாவின் இரண்டு வருகைகளுக்கிடையேயான இந்த பதற்றம் தான் இது (சிறப்பு தலைப்பு: மேசியாவைப் பார்க்கவும்), ஒரு விதத்தில், பழைய ஏற்பாட்டிலிருந்து காணப்படாத, அல்லது குறைந்தபட்சம் தெளிவாக தெரியாத இரண்டு யூத யுகங்களை (சிறப்பு தலைப்பு: இந்த யுகம் மற்றும் வரவிருக்கும் யுகம் பார்க்கவும்) மேலோங்கியதாய்

இருக்கின்றது. யதார்த்தத்தில், இந்த இரட்டை வருகை அனைத்து மனிதகுலத்தையும் மீட்பதற்கான YHWH இன் உறுதிப்பாட்டை வலியுறுத்துகிறது (ஒ.பா. ஆதி. 3:15; 12: 3; யாத்திராகமம் 19: 5 மற்றும் தீர்க்கதரிசிகளின் பிரசங்கம், குறிப்பாக ஏசாயா மற்றும் யோனா).

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்திற்காக சபை காத்திருக்கவில்லை, ஏனென்றால் பெரும்பாலான தீர்க்கதரிசனங்கள் முதல் வருகையை குறிக்கின்றன (ஒ.பா. *How to Read the Bible For All Its Worth,* பக். 165-166). விசுவாசிகள் எதிர்பார்ப்பது என்னவென்றால், உயிர்த்தெழுப்பப்பட்ட இராஜாதி இராஜா மற்றும் கர்த்தாதி கர்த்தரின் மகிமையான வருகையையும், நீதியின் புதிய யுகத்தின் எதிர்பார்க்கப்படும் வரலாற்று நிறைவுகளான பரலோகத்தில் இருப்பதைப் போல பூமியிலும் நடக்கவேண்டும் என்பது ஆகும். (ஒ.பா. மத் 6:10). பழைய ஏற்பாட்டு விளக்க வெளிப்பாடுகள் தவறானவை அல்ல, ஆனால் முழுமையற்றவை. YHWH இன் வல்லமையிலும் அதிகாரத்திலும் தீர்க்கதரிசிகள் கணித்ததைப் போலவே அவர் மீண்டும் வருவார்.

இரண்டாவது வருகை என்பது ஒரு வேதாகம சொல் அல்ல, ஆனால் முழு புதிய ஏற்பாட்டின் உலகக் கண்ணோட்டம் மற்றும் கட்டமைப்பில் அதன் கருத்து காணப்படுகின்றது. தேவன் அதையெல்லாம் நேராக்குவார். தேவனுக்கும் அவருடைய சாயலில் உருவாக்கப்பட்ட மனிதர்களுக்கும் இடையிலான ஐக்கியம் மீள்நிரப்பப்படும். தீமையானவை நியாயம்தீர்க்கப்பட்டு அகற்றப்படும். தேவனின் நோக்கங்கள் தோல்வியடைய முடியாது, தோல்வியடையாது!

ஆரம்பகால சபை சபாத் மற்றும் வாரத்தின் முதல் நாள் (அதாவது ஞாயிற்றுக்கிழமை, உயிர்த்தெழுதல் நாள்) இரண்டிலும் வழிபட்டது. ஜெப ஆலயம் வளர்ந்து வரும் கிறிஸ்தவ இயக்கத்தை, இயேசுவை மேசியாவாக நிராகரிக்குமாறு உறுப்பினர்களைக் கோரினார் (உதாரணமாக, பதினெட்டு ஆசீர்வாதங்கள்). இந்த கட்டத்தில் (உதாரணமாக, கி.பி. 70) கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் பிரத்தியேகமாக சந்தித்தனர்.

Copyright © 2014 Bible Lessons International

▣ **"தமது பரிசுத்தவான்கள்**" "பரிசுத்தவான்கள்"(சொல்." பரிசுத்தர்கள்") ஒன்று (1) இயேசுவுடன் வரும் தேவதூதர்கள் (ஒ.பா. உபா. 33: 2-3; சகா. 14: 5; மத் 16:27; 25:31; மாற்கு. 8:38; 2 தெச. 1: 7; வெளி 19: 4); அல்லது (2) அவருடைய மக்கள், பரிசுத்தவான்கள் (ஒ.பா. 1 தெச. 4: 14-16). பவுல் ஒருபோதும் தேவதூதர்களை "பரிசுத்தர்கள்" அல்லது "பரிசுத்தவான்கள்" என்று அழைக்கவில்லை, "மொழிபெயர்ப்புப் பிரச்சினையைத் தீர்க்கலாம். அநேகமாக தேவதூதர்கள் மற்றும் பரிசுத்தவான்கள் இருவரும் அவருடன் பரலோக மேகங்களில் திரும்பி வருவார்கள். இந்த சபைக்கு இறந்த பரிசுத்தவான்கள் கடைசி கால நிகழ்வுகளில் பங்கேற்பார்களா என்று உறுதி இருக்கவில்லை.

பரிசுத்தர்கள், அதாவது "பரிசுத்தவான்கள்", பரிசுத்தரால் (ஒ.பா. 1 பேது. 1:15) பரிசுத்தத்திற்கு அழைக்கப்படுகிறார்கள் (ஒ.பா. 1 தெச. 4: 3)! கிறிஸ்தவத்தின் குறிக்கோள் இப்போது "பரிசுத்தத்தன்மை"யுடன் வாழ்வது (ஒ.பா. எபே 1: 4), நாம் இறக்கும் போது சொர்க்கம் அல்ல!

**SPECIAL TOPIC: SAINTS**
**சிறப்பு தலைப்பு: பரிசுத்தவான்கள்** (*hagios*)

இது எபிரேய *kadosh*ஷின் (கடோஷின்) சமமானகிரேக்க பதமாகும் (NOUN, BDB 871; VERB, BDB 872, KB 1066-1067; சிறப்பு தலைப்பு: பரிசுத்தத்தைப் பார்க்கவும்), இது சிலரை, சிலவற்றை அல்லது சில இடங்களைத் வேறு பிரிப்பதற்கான YHWH இன் பிரத்யேக பயன்பாட்டு அடிப்படை அர்த்தத்தைக் கொண்டுள்ளது. இது "பரிசுத்தமான" என்ற ஆங்கில கருத்தை குறிக்கிறது. இஸ்ரேல் YHWH இன் "பரிசுத்த தேசமாக" இருந்தது (ஒ.பா. 1 பேதுரு 2: 9, இது யாத்திராகமம் 19: 6 ஐ மேற்கோள் காட்டுகிறது). YHWH அவரது இயல்பு (நித்திய, உருவாக்கப்படாத பரிசுத்தத்தன்மை) மற்றும் அவரது தன்மை (தார்மீக முழுமை) ஆகியவற்றால் மனிதகுலத்திலிருந்து வேறுபிரிந்துள்ளார். அவர் எல்லாவற்றையும் அளவிட மற்றும் தீர்மானிக்கும் தரமாக இருக்கின்றார். அவர் எல்லைக்கு அப்படிப்பட்டவர், பரிசுத்தர், பரிசுத்தர்.

தேவன் மனிதர்களை ஐக்கியத்திற்காக படைத்தார், ஆனால் வீழ்ச்சி (ஆதியாகமம் 3) ஒரு பரிசுத்த தேவைனுக்கும் பாவமுள்ள மனிதகுலத்திற்கும் இடையே ஒரு உறவு மற்றும் தார்மீக தடையை ஏற்படுத்தியது. தேவன் தனது உணர்விலான படைப்பை மீட்டெடுக்கத் தேர்ந்தெடுத்தார்; ஆகையால், அவர் தம் மக்களை "பரிசுத்தராக" இருக்குமாறு அழைக்கிறார் (ஒ.பா. லேவி. 11:44; 19: 2; 20: 7,26; 21: 8). YHWH உடனான ஒரு விசுவாச உறவின் மூலம், அவருடைய மக்கள் அவருடனான உடன்படிக்கை நிலைப்பாட்டினால் பரிசுத்தமடைகிறார்கள், அதோடு பரிசுத்த வாழ்க்கையை வாழ அழைக்கப்படுகிறார்கள். (சிறப்பு தலைப்பு: பரிசுத்தமாக்குதல் காண்க, ஒ.பா. மத் 5:48; எபே 4: 1,17; 5: 2-3,15; 1 பேதுரு 1:15).

இந்த பரிசுத்த வாழ்க்கை சாத்தியமாகும் ஏனென்றால் விசுவாசிகள் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு மன்னிக்கப்படுவதால் ஆகும். (1) இயேசுவின் வாழ்க்கை மற்றும் (2) ஊழியம் மற்றும் பரிசுத்த ஆவியின் பிரசன்னம் அவர்களின் மனதிலும் இதயத்திலும் இருப்பதாலாகும். இது விசுவாசிகளின் முரண்பாடான சூழ்நிலையை நிறுவுகிறது:

1. கிறிஸ்துவினால் சுமத்தப்பட்ட நீதியின் காரணமாக பரிசுத்தராக இருப்பது (உதாரணமாக, ரோமர் 4)
2. ஆவியின் பிரசன்னம் இருப்பதால் பரிசுத்தமாக வாழ அழைப்பு (சிறப்பு தலைப்பு: பரிசுத்தமாக்குதலைப் பார்க்கவும்)

விசுவாசிகள் "பரிசுத்தர்கள்" *(hagioi)* (ஹாகியோய்) ஏனென்றால்

1. பரிசுத்தரின் சித்தம் (பிதா, ஒ.பா. யோவான் 6: 29,40; 1 பேதுரு 1: 15-16)
2. பரிசுத்த குமாரனின் கிரியை (இயேசு, ஒ.பா. 2 கொரி. 5:21; 1 பேது. 1: 18-21)
3. பரிசுத்த ஆவியின் எமக்குள் வாசம்செய்தல் (ஒ.பா. ரோமர் 8: 9-11,27)

புதிய ஏற்பாடு எப்போதும் பரிசுத்தவன்களை பன்மையில் குறிப்பிடுகிறது (பிலி. 4:21 ல் ஒரு முறை தவிர, ஆனால் அதன் சூழல் அதை பன்மையாக ஆக்குகிறது). இரட்சிக்கப்படுவது ஒரு குடும்பத்தின், ஒரு உடலின், ஒரு கட்டிடத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்! வேதாகம விசுவாசம் தனிப்பட்ட அழைப்புடன் தொடங்குகிறது, ஆனால் ஒரு கூட்டுறவு ஐக்கியத்தை ஏற்படுத்துகின்றது. நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சரீரத்தின் ஆரோக்கியம், வளர்ச்சி மற்றும் பக்திவிருத்திக்காக வரங்களளிக்கபட்டுள்ளோம் (ஒ.பா. 1 கொரி. 12:11) - சபை (ஒ.பா. 1 கொரி. 12: 7). ஊழியம் செய்ய நாங்கள் இரட்சிக்கப்பட்டோம்! பரிசுத்தத்தன்மை ஒரு குடும்ப பண்பு ஆகும்!

இது விசுவாசிகளுக்கு ஒரு தலைப்பாகவும் (ஒ.பா. அப்போஸ்தலர் 9: 13,32,41; 26:10; ரோமர் 1: 7; 1 கொரி. 1: 2; 2 கொரி. 1: 1; எபே 1: 1; பிலி. 1: 1; கொலோ. 1: 2)

மற்றவர்களுக்கு ஊழியம் செய்யும் ஒரு வழியாகவும் மாறியது (ஒ.பா. ரோமர் 12:13; 16: 2; எபே 1:15; கொலோ. 1: 4; 1 தீமோ. 5:10; எபி. 6:10). எருசலேமில் உள்ள தாய் சபையில் உள்ள ஏழைகளுக்காக புறஜாதி சபைகளிலிருந்து பவுல் ஒரு முறை காணிக்கைப் பெற்றுக் கொண்டார் (ஒ.பா. ரோமர் 15: 25-26; 1 கொரி. 16: 1; 2 கொரி. 8: 4; 9: 1)

Copyright © 2014 Bible Lessons International

"ஆமென்" பற்றிய சிறப்பு தலைப்புக்கு கலா 1: 5 ஐக் காண்க.

**கலந்துரையாடல் கேள்விகள்**

இது ஒரு ஆய்வு வழிகாட்டி வர்ணனையாகும், அதாவது வேதகமத்தைப் பற்றிய உங்கள் சொந்த விளக்கத்திற்கு நீங்களே பொறுப்பு. நாம் ஒவ்வொருவரும் நம்மிடம் இருக்கும் வெளிச்சத்தில் நடக்க வேண்டும். நீங்கள், வேதாகமம் மற்றும் பரிசுத்த ஆவியானவர் மொழிபெயர்ப்பில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும். இதை நீங்கள் ஒரு வியாக்கியானவியலாளரிடம் விட்டுவிடக்கூடாது.

புத்தகத்தின் இந்த பகுதியின் முக்கிய பிரச்சினைகள் மூலம் சிந்திக்க உதவும் வகையில் இந்த விவாத கேள்விகள் வழங்கப்படுகின்றன. அவை உறுதியானவை அல்ல, தூண்டக்கூடியவை என்று கருதப்படுகின்றன.

1. பவுல் தனியாக இருப்பது ஏன் கடினமாக இருந்தது?
2. "விசுவாசம்" என்ற வார்த்தையின் வெவ்வேறு அர்த்தங்களை பட்டியலிடுங்கள்.
3. விசுவாசிகளுக்கு துன்பம் சாதாரணமானதா? ஏன்?

b. பரிசுத்தமாக்குதல் ஆரம்பமா அல்லது முற்போக்கானதா?
c. 5 வது வசனம் ஒருவரின் இரட்சிப்பையா அல்லது காணியைக் குறிக்கிறதா? 2: 1 மற்றும் 3: 5 விதைப்பவன் உவமையுடன் எவ்வாறு தொடர்புபடுகின்றன (ஒ.பா. மத் 13: 1-23)?
d.

Copyright © 2013 Bible Lessons International